**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.0095/அ1/2026 நாள். .09.2026**

---

**பொருள் :** பள்ளிக்கல்வி - அலுவலகப் பணியாளர்கள் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பதவியில் பணிபுரிபவர்களுக்கு கட்டாய மாறுதல், விருப்ப மாறுதல் பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல், கலந்தாய்வு EMIS இணையதளத்தில் நடத்துவது - அலுவலக பணியாளர்களின் விவரங்களை அடங்கிய பதிவுகள் முழுமையாக இல்லாதது - புதிய பதிவுகளை உள்ளீடு, பதிவுகள் மாற்றம் மற்றும் திருத்தம் செய்வது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் - சார்ந்து.

**பார்வை :** சென்னை -06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.030153/அ3/இ1/2026, நாள்.18.09.2026.

-----

பள்ளிக்கல்வித் துறையின்கீழ் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்கள் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பதவியில் பணிபுரிபவர்களுக்கு கட்டாய மாறுதல், விருப்ப மாறுதல் பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல், கலந்தாய்வு EMIS இணையதளத்தில் நடத்துவது தொடர்பாக அலுவலக பணியாளர்களின் விவரங்களை அடங்கிய பதிவுகள் முழுமையாக இல்லாத காரணத்தினால் புதிய பதிவுகளை உள்ளீடு, பதிவுகள் மாற்றம் மற்றும் திருத்தம் செய்வது தொடர்பான அறிவுரைகள் மற்றும் உரிய வழிமுறைகள் பார்வையில் காணும் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் பொருள் சார்ந்து மேற்காண் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள அறிவுரைகள் மற்றும் உரிய வழிமுறைகளை பின்பற்றி தங்களது அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் முதல் இரவுக் காவலர் வரையிலான பணியாளர்கள் எண்ணிக்கையினையும், EMIS இணையதளத்தில் பதிவுகள் அடங்கிய எண்ணிக்கையும் சரியாக உள்ளதா என்பதை ஒத்திசைவு செய்து அனைத்து பணியாளர்களின் விபரம் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது என சான்று மற்றும் அதற்கான அறிக்கை 24.09.2026 காலை 10.00 மணிக்குள் இவ்வலுவலகம் அனுப்பி வைக்குமாறு அனைத்து அலுவலர்கள் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு :**

1. பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை கடித நகல்.
2. உரிய வழிமுறைகள்.

22/9/26

**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்.**

**பெறுநர் :**

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கனிவுடன் அனுப்பலாகிறது.
2. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலர் ( இடைநிலைக் கல்வி) ( தங்கள் அலுவலகம் மற்றும் அனைத்து அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து சான்று மற்றும் அதன் அறிக்கை பெற்று அனுப்பி வைக்க தெரிவிக்கலாகிறது ).
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்), வேலூர்.
4. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகம், வேலூர்.
5. அனைத்து அரசு நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நகல் :**

கோப்பிற்கு.

பா.க

<u>சான்று</u>

வேலூர் மாவட்டம், ………………………………… அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளியில் / …………………………………… அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அனைத்து அலுவலகப் பணியாளர்களின் விவரங்கள் அனைத்தும் EMIS -ல் இணையதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது என சான்று அளிக்கப்படுகிறது.

தலைமையாசிரியர் / அலுவலரின் கையொப்பம்